உ

பரமபதி துணை.

சிவ சுப்பிரமணியக் கடவுள்மீது
முக்கியமான திருப்புகழ் பாடல்களும்
பார்ஸி இந்துஸ்தான் வர்ணமெட்டுகளு மடங்கிய

# இந்துஸ்தானி பஜனை

## கீர்த்தனை இரண்டாம் பாகம்.



மதுரை புதுமண்டபம் புக்ஷாப்,
இ. மா,
கோபாலகிருஷ்ணக் கோனாரால்

...துரை மகமதியன் பிரஸில்
...திப்பிக்கப்பெற்றது.

...ஜிஸ்டர் காப்பி ரைட்
1914

(அணா 2

(Q26:41)
M14.
186181

உ

பரமபதி துணை.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள்மீது

முக்கியமானத் திருப்புகழ் பாடல்களும்

பார்ஸீ இந்துஸ்தான் வர்ணமெட்டுகளும் அடங்கிய

# இந்துஸ்தான் பஜனை

கீர்த்தனை 2-வது பாகமும்

ஸ்ரீ கோபாலகிருஷ்ண நாமசங்

கீர்த்தனமும்

இஃது

முதுகுளத்தூர் அஷ்டாவதானம் வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ.

மு. வ. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள்

மாணாக்கரிலொருவரான

மதுரை, மகா-௱-௱-ஸ்ரீ

கலியாணசுந்தரம் பிள்ளை

அவர்களாலியற்றப் பெற்று

மதுரை, புதுமண்டபம், புக்ஷாப்,

இ. மா,

கோபாலகிருஷ்ணக் கோனாரால்,

மதுரை.

மகமதியன்பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது

1914

இதன் விலை ரிஜிஸ்டர் காபிரைட் அணா—2.

# பத்மாவதி சரித்திரம்.

## ஓர் சிறந்த செந்தமிழ் நாவல்

இது ஆங்கில திராவிட நிபுணரும் முத்துமீனாக்ஷி, ஒதெல்லோ, விஜயமார்த்தாண்டம், தில்லைகோவிந்தன் முதலிய பலநாவல்கள் இற்றிப் பெயர் பெற்றோரான ஸ்ரீ அ. மாதவையர் அவர்கள் பி. ஏ. அவர்களால் ஆடவர் பெண்டிர் அனைவரும் விரும்ப இனியசெந்தமிழ நடையில் எழுதபட்டுள்ளது இதனைப் படிக்க ஒருமுறை கையில் எடுத்தால் முற்றிலும் படித்து முடிக்கும்வரை புத்தகத்தை கீழேவைக்கமனம் வராது என்பது திண்ணம்.

இதற்கு முந்திய பதிப்புகள் வெவ்வேறு பாகங்களாக இரண்டு புத்தகமாக இருந்ததை இப்போது அவ்விருபாகத்தையும் ஒரேபுத்தகமாக கண்டவர்கண்ணும் மனமும்களிக்க அநேக சித்திரப்படங்களும் புதிதாகச்சேர்த்து பளபளப்பான உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் பதிபிக்கப்பட்டுள்ளது.

இரண்டுபாகமும் சேர்த்து சிறந்த பைண்டுசெய்த
புத்தகம் 1-க்கு விலை ரூபா 1 - 0—0

---

## அற்புதமான தமிழ் நாவல்

# மதனகாந்தி

என்னும் இப்பெயருடைய இக்கதையானது ஆண் பெண் இருபாலாருடைய மனத்திற்கும் ஆனந்தத்தை விளைவிக்கக்கூடியதாய், தெளிவான இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது கதாநாயகியானவள், தான்சிக்கும்பல இக்கட்டுகளிலிருந்து தப்பிப்பது அதிசயாச்சரியமாக யிருக்கும்- இக்கதையானது கதைகள் எழுதுவதில் உலகப்பிரசித்திபெற்ற ரெயினால்ட்ஸ் என்பவரால் எழிதப்பட்டமகா அற்புதமான கதைகளில் ஒன்று.

கற்புடைய மதர் வாசிக்கத்தகாத வார்த்தை யொன்றேனும் இதில் கிடையாது- பலவிதக்கதைகள் வெளிவந்திருக்கும். இக்காலத்தில் இக்கதையை வாசிப்பவர்க்கே இதனுண்மை புலப்படும் வாசிக்கத் தொடங்கிவிட்டால் முடிக்குமுன்னர் போஜனத்திற்குச் செல்லவும் மனம் வராதென்பது உண்மை.

புத்தகம் ஒன்றின் விலை ரூபா 1

எமது மேல்விலாசம்,

**இ-மா-கோபால கிருஷ்ணக்கோன்,**

ரப்பர்ஸ்டாம்பு மேக்கர் புக்ஷாப், புதுமண்டபம் மதுரை

உ

பரமபதிதுணை.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள்பேரில்

# இந்துஸ்தான் பஜனைக்

## கீர்த்தனை இரண்டாம்பாகம்.

### விநாயகர் துதி.

வெண்பா,

சீராருந் தென்குன்றச் செங்கடம்பன் றன்மீதிற்
பேராருங் கீர்த்தனைநான் பேசுதற்கு—கார்போலத்
துங்கமதமாமழையைத் தூற்றுங் கரிமுகத்து
ஐங்கரனார் பாதம் அரண்.

மேரேசையா சுந்தர் என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி

பல்லவி.

ஆறுவாகனா அருள்செய் பூரணா
ஆதிபரனீன்ற சோதியே காரணா (ஆ)

அநுபல்லவி.

பாகுமொழிமாது பாகம் வாழ்வாரணா
பத்தர்கள் சித்தர்கள்
நித்தமும் போற்றிடும்
பாசபவ நாசாசரு வேசா நன்மறை யாரணா (ஆ)

சரணம்.

ஒற்றைக்கிம்புரிமருப் பிற்றகெம்பீரா
ஓம்பிரணவமதி லுற்றஐயாரா
உம்பரும் இப்பரும்
செம்பது மந்தொழுஞ்
சிந்தூரா கல்யாண சுந்தரன் பணிதிரிநயனா (ஆ)

## சரஸ்வதி துதி விருத்தம்.

இயலானது கொண்டு நின்றிருநாமங்களேத்துதற்கு
முயலாமை யாற்றடு மாருகின்றேனிந்த மூவுலகுஞ்
செயலாலமைத்த கலைமகளேநின் றிருவருளுக்
கயலாவிடாம லடியேனையுமூவந் தாண்டருளே

கில்கேபுராஜஞ்சால் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான். தோடி-அடதாளம்

பல்லவி.

தாயேகலைவாணி தருணம்
தண்டமிட்கருள்புரி வெண்டாமரையிலுறை (தா)

அநுபல்லவி.

ஆயிழையணிபூணி தருணம் (த)

சரணம்.

சேயையாதரிப்பாய் சீரருள்வாரியே
தூயபளிங்குபோற் றுலங்குசிங்காரியே
ஆய்ந்தபுத்தகபாணி தருணம் (த)
பிர்மனனுதினமு மருவுங்காரணியே
பேரறிவுகூறுமா பிரியபூரணியே
வரமீயுங் கல்யாணி தருணம் (த)
சந்ததமும்நானே சிந்தைசெய்தேனே
மைந்தன்கலியாண சுந்தரனும்பணி
கந்தமலர்க்குழலாய் தருணம் (த)

---

## ஸ்ரீ மகாவிஷ்ணு துதி.

ஜாவோஸகிபிய்யாஸே பிய்யாமிலாலேவ் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தாளம்-ஏகம்

பல்லவி.

த்ாமோதரராமா சங்காழிகொள்க்ஷேமா
தருணமிதே கருணைசெய்வாய் நின்
தஞ்சமல் லாலிப்ர பஞ்சத்திலார் புகல் நீயே (தா)

அநுபல்லவி.

மாமகள் மகிழ் வாமனே புகழ் கொடு
மாயமெனும் பந்தபாசவி னையைக் கொய்வாயே (தா)

சரணங்கள்.

அண்டமெல்லா முன்ன முண்டுமிழ்வாயனே
அடியவர்க் கிரங் கிடும் நற்றாயனே
வண்டரக்கர் தம்மைக் கண்டனஞ்செய்கோனே முகில்
வண்ணா செந்தாமரைக் கண்ணா பொற்கழலீவாயே (தா)

சிலைபதனைப் பெண்ணாய்ச் செய்தமலர்ப்பாதா
செங்கருடன்மிசை வந்திடு விநோதா
மலையையெடுத்தன்று மழைத்தடுத்தநாதா சிறு
மைந்தன்கல்யாணசுந் தரன்பணி மணிமெய்யா (தா)

---

## சோமசுந்தரப் பெருமான் துதி,

ஜெயராம ரெகுபதி ஜெயராம என்ற வர்ணமெட்டு

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி

பல்லவி.

சுந்தரேசா சுகமருள்
சோதிஆதிவேணி பாதிமதியணி (சு)

அநுபல்லவி-

நந்துலாவும் மதுரைவாழ்
நாதனேநன் னீதனே மாசுரர்புகழ் (சு)

சரணங்கள்.

சங்கராச தாசிவ
தண்டைதங்குதுங்க நங்கைமனமகிழ் (சு)

எங்குநிறை இறையவா
ஈசனேப்ரகாசனேத்ர சுபகர (சு)

திரிபுரத்தை எரிபட
திரவீர ஆர வார நகைபுரி (தி)

கரியுரிகங் காளனே
காலகால நீலகண்ட நீறணி (சு)

தந்தை தாயும் தமர் நீயே
தாதா வேதா போதா வாதுஏவினம (சு)

அந்திவண்ணா அனுதினம்
அன்புடன் கல்யாண சுந்தரன் பணிந்திடும். (சு)

---

## ஸ்ரீ மீனாம்பிகை துதி,

அம்மாமதுரை மீனாக்ஷி என்ற் வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி

கண்ணிகள்.

என் அம்பாள் சுந்தரிகல் யாணி உயர்
அமரர்போற்றுஞ்சக்ர பாணி, விந்தைசேர்
அம்மணங்கமழும் வேணி
அந்தரிப வாணி (அ)

ஈன்ற இன்பார்தாய்நீயல்லால் வேறு உண்டோ
இப்பூமியிலதைக் கூறு வர்மமாய்
இருப்பதேனோகண்ணாற் பாரு
எனதுமருள் திரு (அ)

வேண்டாம் ஏதுமேழைமீதில் வாது அம்மா
இன்னும்செய்வதுத காது என்றனை
வினின்றாபிம்மண் மீது
இனிவிடேனிப் போது (அ)

தேவி ஜோதிஸ்வரூபிவுனை நானே தினம்
தொழுதுபோற்றி நம்பினேனே கல்யாண
சுந்தரர்மகிழுந் தேனே
சுகமருள்வாய் தானே (அ)

---

# ஸ்ரீசிவசுப்பிரமணியர் கீர்த்தனம்.

## விருத்தம்.

கங்கையஞ்சடைசேர் முக்கட் கரும்பருண் மணியேபோற்றி
அங்கயங் கனியேபோற்றி யருட்பெருங் கடலேபோற்றி
பங்கயன் முதலோர்ரோற்றும் பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளுந்தெய்வச் சரவண பவனேபோற்றி.

முருகநின் பாதம்போற்றி முளரியங் கண்ணற்கன்பா
மருகநின் கழல்கள்போற்றில் வானவர் முதவாபோற்றி
பெருகருள் வாரிபோற்றி பெருங்கலாப் பொருப்பேபோற்றி
தருகநின் கருணைபோறறி சாமிசற் குருவேபோற்றி.

சந்திரவதனத் தையலாள் என்ற வர்ணமெட்டு

இராகம்-தோடி-தாளம்-ஆதி

## பல்லவி.

அருள்பரங்கிரி ஐயனே உயர்
அன்பர்கள்பணிமெய்யனே திண்புயப்படைக்கையனே (அ)

## அநுபல்லவி.

கரிதனைக்காத்தமாயோன் மருகனானவிநோதா
கனகமயூரமூர்கோ கனகநிகரும்பாதா
கற்பகவற்புத விற்பனபோதா
சர்ப்பமுடித்தவர் சற்குருதாதா
கலகம்விளை தானவர் போரிடுவோய்
அலகையுணுமாறடல் வேல்விடுவோய்
கானகத்திருக்குற மான்மகிழ்ந்திடுலோலா
மோனகதிபெறச்செய் ஞானகுன்றுறைவேலா (அரு)

## சரணம்

எந்தன்அன்னைவயிற்றில் வத்தநாட்குறியாதோ
அந்தநாளிதுவரை கந்தாநீயறியாதோ
தொந்தவினையால்மனம் நொந்ததைத்தெரியாதோ
சிந்தைமகிழ்ந்துவின்பந் தந்துரக்ஷித்தாற்றீதோ

செப்புகவிக்கண முக்கணர்பாலா
செப்புதனப்பிடி மெச்சிடும் சீலா
திரிலோகமுமே புகழுந்திரனே
வரநல்கிடுமைங் கரர்சோதரனே
சிந்தைமகிழ்ந்துதின மிங்கமதுரைப்பதி
மைந்தன்கல்யாணசுந்த ரன்றுதிக்கிரங்குந்தநி (அரு)

---

பாஜு பஞ்சஹரா என்ற வர்ணமெட்டு
இராகம்-பார்வி-தாளம்-ஆதி.

பல்லவி.

திரு வாலையருள் வேலவனே வந்தருள்வாயே (தி)

அநுபல்லவி.

கோலமயிலேறிவருங் குமரஷண்முகா
ஆலமுண்டநீலகண்ட னருளுநல் வாகா, (தி)

சரணங்கள்

சுத்தபரி பூரணசுக சுகிர்த மெய்யனே
சித்தர்முனிவர்தேவர்கள் தினந்துதித்த துய்யனே (தி)

அளிமுரலுங் கானமதி லன்புடனேகி
கிளிமொழியாளங்கண் வள்ளியகமழ்போகி (தி)

அறுமுகசிங்கார வரை யாரணுபாலா
குறுமுனிக்கே யருளியநற் குருபரசீலா (தி)

கல்யாணசுந் தரன்பணி கார்த்திகேயனே
அல்லல்தனை நீக்கியருள் அன்பர்நேயனே (தி)

---

சுந்தரப்யாரிமைஹோ என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸதான்-தேசிகம்-தாளம்-ஆதி

கண்ணிகள்.

சுந்தரியருள்பாலா சோதிமலிசுடர்வேலா
சோதிமலிசுடர்வேலா சுரர்பணிந்திடுஞ்சீலா (சுக்)

சித்தர்முனிவோர்போற்றும் சிறந்தமலர்கரேற்றும்
சிறந்தமலர்கள்தூற்றும் சேர்ந்தானைக்காப்பாற்றும்(சுந்)
குறுமுனிக்குபதேசா குன்றுரையும் பிரகாசா
குன்றுரையும்பிரகாசா குருபரநானவிசா (சுந்)
திருந்தும் பன்னிருதோளா தெய்வயானைமணாளா
தெய்வயானை மணாளா தீரவீரவைவேலாளா (சுந்)
ஐயா பன்னிருகையா அரன்பயின்றிடுந்துய்யா
அரன்பயின்றிடுந்துய்யா அருள்வடிவானமெய்யா (சுந்)
கனகமயூரவாகா கல்யாணசுந்தர யோகா
கல்யாணசுந்தர யோகா கருணையுதவும் த்யாகா (சுந்)

---

பியரி தோரி பியாரிஷான் என்றவர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-சாப்பு
பல்லவி.

தென்பரங்கிரி யம்பதி
தேவனே யருள் தகி (தெ)

அநுபல்லவி.

உம்பர் மகிழ்ந்தேற்ற அன்பர்மலர்தூற்ற
வம்பசூரர் சிரங் கொய்தவா வானவர்க்கருள் செய்தவா(தெ)

சரணங்கள்.

உயர் துதி பெறுசீலா சுந்தரி பாலா
சோதிமதி ஞானநீதி சுகமோன ஆதியே
அருமெழில் சிகி யூர்தியே (தெ)
நான் மறை புகழ்தூயா மகிள்வளி நேயா.
மைந்தன் கலியாண சுந்த்ரன் நீதந்துதி வாகனே
வாரமீய்வரய் நல் யோகனே (தெ)

---

வாராயென்னை யணையத்தானே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கவாய்- தாளம்-ஆதி

கண்ணிகள்.

ஆதாரமெனவுந்தன் பாதாரம்நம்பினேன்
ஐயனே அருள் முருகையனே
அறுமுக வெழிலுறு குரு பரனே (ஆ)
தீரா திண்புயமிகு வீராதி சூரின்
சிரத்தை யறுத்த நற்றிரத்தனே
திரிபுர நகைத்தெரித்தவன் மகனே (ஆ)
கோலாகாலபமயில் வேலா யெயினர்தங்
கொஞ்சும வள்ளிமகிழ் ரஞ்சிதனே
கொடி வாரணமுடைய குண நலனே (ஆ)
வேதா விண்ணவர்பணி பாதா பரங்கிரி
நாதா வித்தர்புக ழத்தனே
விரிகுடை வரைபிடி யரிமருகா (ஆ)
வாராய் செய்வினைகளைத் திராய்திருக்கண்ணுற்
பாரா திருப்பதென் பராபரா
பாலன் கலியாணசுந்த்ரன் சீலனே குகா (ஆ)

---

ஆவோ ஆவோ சவாரியுக மாரீரே என்ற வர்ணமெட்டு

இராகம்-அபுருபம்- தாளம்-ஆதி-

பல்லவி.

வரந்தாரும் வாலையருளிய பாலா என்மேல்
வஞ்சமெண்ணிடலாகாது வேலா

அநுபல்லவி.

பரிகரியாகவேசெய் பரமற்கருள்பரா
பண்ணவர்நிதமும்பணி யுந்தயாபரா (வர)

சரணம்.

தென்பழநிகல்வரையிற் சிறந்திடும்வீரா
திண்புயவாக்கர்சிரஞ் சிதைத்திடுந்திரா (வர)

தோகைவாகமாயூர மூர்ந்திடும்யோகா
தூயவிரிழைதேவகுஞ் சரியாள்மோகா (வர)

நரஹரிமருகனான நாதனேதேவா
நங்கைவள்ளிவனதனக் தழுவிடுமூவா (வர)

அரஹராசரவணபொன் னாறுமாமுகா
அனுதினங்கலியாணசுந் தரன்பணிகுகா (வர)

மஞ்சுநிகர் குந்தள மின்னே-என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான் பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

வேதமந்த்ரவி னோதசுந்தரா விண்ணவரேற்ற மண்ணுளோர்போற்
வீரசூரரைநாசஞ்செய்கரா—திகழ் [ற
வேலனேயரன்பாலனே குணசீலனே மறைமூலனே மோகம்
வேண்டியே எயினர்தம்மானை உளமகிழ்ந்து மொழிபகர்ந்து
விற்பூனியைச் சேர்ந்த பெம்மானே

பாதிமதிசூடியபரன் பணிந்துபக்கம் வணங்கிநிற்க
பாங்குடனே மந்த்ரமருள் திறன்—என்று
பக்தியாயுனைநத்திமேனிதம் சித்தமயின்மே லித்தினம்வந்து
பக்தனாகவுனதடிசெய்ய முடியைச்சூட்டி அருள்பாராட்டி
பரமானந்த மீகுவாயுய்ய

சுந்தரத்தைநிந்தைசெய்யோதி அந்தரிக்கொருமைந்தனேதிருக்
கந்தனேகண்பார் பிரக்யாதி—எனக்
காருதலைசொலவே றொருவரிலையாரு முகமுறுசீருடைய அயிற்
கையனே பன்னிருகையனே இன்னமும்வாது பண்ணலாகாது
கர்த்தனே காங்கேய மெய்யனே

செந்தமிழ்வழங்குந்தந்திரன் தென்மாமதுரைநன்னோர்நகர்வாழ்
தீரன்கலியாண சுந்தரன்—தினம்
சிந்தனைசெயும்விந்தனே எனைஎந்தநாளுமுகந்து ஆளுவாய்
தேலர்க்கடம்பணிவோனே தேவகுஞ்சரிமேவிக்கொஞ்சிடும்
சேந்தனே யாதிமுதல்வோனே.

ப்ஜாயுமே தில்லேன கானுலே என்ற வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தான் தேசிகம். தாளம்-ஏகம்

பல்லவி

வந்தாளா திருப்பதேன் வஞ்சமே உயர்
வாலையருள் வேலவாநின் றஞ்சமே (வந்)

அநுபல்லவி

கந்தாவண்டாருமலர்க் கடம்பா உமைமகனே
சிந்தாவரமதனைச் சீராய்நல்குங் குகனே
கொந்தாரமாலையணி குஞ்சரிமணமகனே
செந்தூரில்வாழுமுயர் தேசிகாஷண்முகனே
அந்தரத்தோர்புபுழும் ஆறிரண்டாம்பாகனே

அன்பன்கல்யாண சுந்தரன்
அகமுறை தேவா எனை
ஆதரித் தாள்மகானு பாவா (வந்)

---

ஐயோ இது ஞாயமா என்ற வர்ணமெட்டு
இராகம் தேசிகம் ஆதிதாளம்

கண்ணிகள்

ஆலமுண்டோன் பாலனே யருளும்வடிவேலனே
ஞாலம்புகழ் சீலனேமா நாதனேவள்ளிலோலனே
நீலமஞ்ஞைப்பாகனே நிமலற்கருள்யோகனே
நாலாரணமுமெந்த நாளுந்துதிகுகனே (ஆல)

மூவிருசிரத்தனே முன்னான்கு நீள்கரத்தனே
மேவிடுஞ்செயத்தனே மேவார்புகழ்புயத்தனே
காவிலெயினர்குறக் கன்னிமகிழ்பவனே
சேவற்கொடியுடையோய் செந்தூரில்வாழ்பவனே (ஆல)

கந்தம்லர்த்தாரணியுங் கந்தனேபரைமைந்தனே
சந்தம்நின் அம்பொன்னடி தாழ்ந்தனன் சம்பந்தனே
செந்தாமரைப்பாதனே தேவகுஞ்சரிநாதனே
சேயன்கல்யாணசுந்த ரன்பணிவினோதனே

---

கண்மணியே நல்லபெண்மணியே என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி

பல்லவி

நடமிடுஞ்சிகி தனைநடத்திய
சுடரயில்வடி வேலா-மா
னிடமேந்திவரன் பாலா-சூழ் (ந)

அநுபல்லவி

கூடலுலகையோர் நொடிவலம்வந்த
கடம்பாவருள்சு சீலா வண்
திடம்புயாமறை மூலா
தேமலர்ச்சோலைத்தினைப் புனந்தனைநாடி
திருவள்ளியைக் கூடி
தினமுங்கொஞ்சிடுங் குணனேகுஞ்சரி
மனமகிழ்மண வாளா (செம்)
மணமுறுமலர்த் தாளா

சரணம்

அலையினிற்படு துரும்பெனத்தின
மலையதேஎன்றன் நெஞ்சம் ஆண்
டலைக்கொடியாயேன் வஞ்சம் எனை
ஆதரித்தென்மன வேதனையைத்தீர்த்திட
யாரினிமேல் நவில் கொஞ்சம் இப்
பாரினில் நானுன்றன் றஞ்சம்
பாலன்கலியாணசுந்த ரன்பணிவோனே
பன்னிருகரத் தோனே
படர்பலசூரர் தடைபடவிடப்
படைவிடு மடல் வீரா கிரி
யுடைபடச் செய்யுந்தீரா (ந)

தாயையும் விட்டுத் தனித்திருந்தால் என்ற வர்ணமெட்டு

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்

கருணாகடாட்சம்வைத் தென்றனை ரக்ஷியுங்
காங்கேயனேகரு ணாகரனே முனம்
அருணையில் வாழரு ணகிரி நாதர்க்கு
அருளுப தேசஞ்செய் யும்பரனே (கரு)

அகண்டபரிபூர ணாதிநற்சின்மய
ஆனந்தபிரம்மம்மு தற்பொருளே இந்த
அம்புவிதன்னிலுன் னன்புதந்தென்னைவந்
தாதரித்தேயின்பந் தந்தருளே (கரு)

வண்ணமயிலில் வருமுருகாவுயர்
வானோர்பணியுஞ் சேனாபதியே கயற்
கண்ணியுமையொரு பங்கிலுறைநீல
கண்டன்சேயேகரு ணாநிதியே (கரு)

தேவராசுக் கர சதைநல்கிய
செல்வமுதுமறை யாரணனே தினைக்
காவிலெயினர் குலமயிலையுட்
கனிந்துமணம்புரி காரணனே (கரு)

பரமனுக்கன்று பிரணவந்தன்னை
பரிந்து பகர்ந்தசெவ் வாயழகா நினைக்
கரங்குவித்தேன்கலி யாணசுந்தரன்பணி
கந்தாகடம்பணி யுங்குழகா (கரு)

---

இராகம்-பிலஹரி-தாளம்-ஏகம்

பல்லவி.

இன்னும்வர்மமா எந்தையேயுனதருளதுநல்க. (இ)

அநுபல்லவி.

பொன்னம்பலத்தே மின்னும்பதத்தால்
பொலிவுறுதகனக வெனுநடமதுபுரிபவரருளறுமுக (இ)

சரணங்கள்.

பொற்புரம்புய மத்தியிலுறைமறைமொழிதரு
வித்தகன்றயருற்றிட வருசிறையதிலிடு
போதாவளி இப நாயக
நீதாகுறு முனி தாயக
தாதா வருள் நிறை யாயக. (இ)

சிந்தைமெத்தவும் நொந்திடமறம்விளையசுரரை
யுந்தியத்தம்விளங்கயிலது கொடுபொறவரு
சேரும் நிணமிசை யேப்பல
வாருயிர கணை பேய்பல
மாறுதெதிர் செய்வாய் பல (இ)

நேர்த்தியாகிய உனதிருபதமனுதினம்நினை
சீர்த்திசேர்கல்யாண சுந்த்ரன்றமிட்கவிபுனை
நிகாசந் ததம் ஆரண
யூகா பந்த நிவாரண
வாகா செந்தில் விதாரண (இ)

---

எந்தனையாளுங்குக தேசிகனே என்ற மெட்டு

இராகம்-கமால்-அட-தாளம்

பல்லவி.

செந்தூரில் வாழுஞ்சிவ ஷண்முகனே சிவஷண்முகனே நின்னைச்
சேவித்துப்பணிந் தேனருளுங்குகனே.
தண்டலைசூழ்மிகு கொண்டல்கள்மண்டிய
விண்டலமண்டலமும் புகழ்தண்டமிழ்ச் (செந்)

அநுபல்லவி.

அந்தரர்பணியுங்கோனே ஐயனே அடல்வேலோனே
தந்திமுகற்கிளையோனே தண்ணார்கடம்பணிவோனே
தக்கன் யாகத்தை யழித்திடு ருத்திர
ருக்கொரு புத்திர சித்திர வற்புதச்

சரணம்

வன்னமயிலேறிவரும் வானவர்சேனுபதியே
கன்னல்மொழி வள்ளிபங்கா காவுங்கருணைநிதியே
கலைக்குமுதற்பொரு ளைக்குறுநன்முனி
வர்க்குரை வித்தக முத்திமிகுத்தருட் (செந்)

செம்பதும நிகர்ப்பாதா தேவகுஞ்சரி விநோதா
கந்தமணி கந்தநாதா கல்யாணசுந்தர நீதா
கற்பகநற்பத தத்துவமுற்றும
னத்தினினைக்கம ருட்டகலுற்றிருச் (செந்)

---

பியாபிநோஜி யானேதும் என்றமெட்டு

இராகம்-மால்கோஷ். தாளம்-ரூபகம்

கண்ணிகள்

கடைக்கண் பாருங் கௌரிசேயா
கார்த்திகேயா கருணைவாரியே
கதியுதவு பதிவரத பதமருள்நீயே
கல்லோதானுன் மனம் கரையாதேனோயினம்
காங்கேயனே நிதியே
காமவெகுளி மயக்கமகற்றிநின்
நேமத்திலே தினம் நின்றிடக்கிருபைசெய்
நீதாபு கழ்பிர க்யாதாபூம் பாதாமா நிர்மல ஆதியே. (கடை)

பிரணவ மதனைப் பிரியாமா யீசன்முன்
பெய்மலர்வாயா பேரின்பநேயா
பேசற்ற வின்பப் பெருக்கே கலியாணசுந்தர ஜோதியே (கடை)

---

கைஸே நாஜூவெதாஸேது வாகோரே என்ற வர்ணமெட்டு

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி.

முத்தி தந்தருள்வாய் குமரேசனே நின்
சித்தம்வைத் தாள்பவநாசனே

அநுபல்லவி.

சத்தியீன்றசா மிநாதவேலா
தர்ப்பரமாகிய வைவேலாளா
ஷண்முகாகுக வாகாசர் வேசனே நின் (சித்

சரணம்.

தெய்வயானைம ணமகனுதா
திரவீரவரை துளை நீதா
பையரவணி யோர்க்கருள் போதா
பணி கல்யாண சுந்தர தாசனே நின். சி

---

மங்களத்தரு

மங்களஞ் செயமங்களஞ் செயமங்களம் சுப மங்களம்
சங்கரர் மகிழ்ந்தரியீன்ற தந்திமுகற்கு மங்களம்
அன்னவாகன மூரும் நான்முகன் அன்னைவாணிக்கு மங்களம்
பண்ணவர் தொழும் பரசிவகுரு வாமுருகற்கும் மங்களம்
செங்கமல மீதிலுறைந்திடு செந்திருவுக்கும் மங்களம்
மங்குல் ரூபவண்ணனை மாதவற்கும் மங்களம்
பூபாலர் தினமும் புகழ் புலவோர்கட்கும் மங்களம்
கோபால கிருஷ்ணனென்னுங் கோனுக்கென்றும் மங்களம்
சந்ததமும் வேலன்றுதி சாற்றுவோர்க்கும் மங்களம்
மைந்தன் கல்யாண சுந்தரன் றனக்கும் மங்களம்

---

உ

பரமபதிதுணை.



ஸ்ரீமத் அருணகிரி நாதர் திருவாய்மலர்ந்தருளிய

# திருப்புகழ்

சீர்சிறக்குமேனி பசேல் பசேலென
நூபுரத்தி னோசை கலீர் கலீரென
சேரவிட்ட தாள்கள் சிவேல் சிவேலென வருமானார்

சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்
நூறுலக்ஷ கோடி மயால் மயால்கொடு
தேடி யொக்கவாடியையோ ஐயோவென மடமாதர்

மார்படைத்த கோடு பளீர் பளீரென
ஏமலித்தெனுவி பகீர் பகீரென
மாமசக்கி லானை யுளோர் முளோமென நினைவோடி

வாடைபற்று வேளை அடா அடாஎன
நீமயக்கமேது சொலாய் சொலாயென
வாரம்வைத்த பார்தமிகோ இதோஎனு வருள்வயே

பாரதத்தை மேருவெளீ வெளீ திகல்
கோடொடித்த நாளில்வரை இவரை இபவர்
பானிரக்கணேசர் குவா குவாகனர் இளையோனே

பாடன் முக்யமாது தமீழ் தமீழிறை
மாமுநிக்கு காதிலுணர் வுணர்வி
பாசமற்ற வேதகுரு குருபர குமரேசா

போர்மிகுத்த சூரன் விடோம் விடோ மெ
நேரெதிர்க்க வேலை படீர் படீரென
போயறுத்த போது குபீர் குபீரென வெகுசோரி

பூமியுக்க வீசுகுகா குகாதிகழ்
சோலைவெற் பின்மேவு தெய்வா தெய்வானை தோள்
பூணியிச்சை யாறுபுயா புயாறுள பெருமாளே

---

## வேறு சந்தம்

மாயவாடை திமிர்ந்திடு கொங்கையின்
மூடுசேலை திறந்துமழுங்கிகள்
வாசல்தோறு நடந்துசிணுங்கிகள் பழையோர்மேல்

வாலநேச நினைத்தழுவம்பிக
ளாசைநோய்கொண் மருந்திடுசண்டிகள்
வாரபேர்பொருள் கண்டு விரும்பிக ளெவரேனு

நேயமேகவி கொண்டுசொல் மிண்டிகள்
காசிலாதவர் தங்களையன்பற
நீதிபோல நெகிழ்ந்தபரம்பிக ளவர்தாய்மார்

பானினேர்மொழி வஞ்சியிளம்பிடி
தேவயானை பெருந்தன குங்கும
பாரமான்மத சந்தனமுக்கிய மணிமார்பா

சேயமாயுரு வங்கொடு வந்தசு
ரேசன்மார்பை யிடந்து பசுங்குடர்
சேரவாரி யணிந்த நெடும்புயன் மருகோனே

தேனுலாவு கடம்ப மணிந்தகி
ரீடசேகர சந்திரர் மைந்தசொல்
தேவர்நாயக செந்திலு வந்தருள் பெருமானே

## வேறு சந்தம்.

தொந்தி சரியமயிரே வெளிற நிரை
தந்த மசைய முதுகேவளைய இதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி

தொண்டு கிழவனிவ னுரென இருமல்
கிண்கிணென முனுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி

வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமே யுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுக துயர் மேவி

மங்கையழு துவிழவே யமபடர்கள்
நின்றுசரும மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எந்தைவருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண்வருக எனதாருயிர்வருக அபிராமா

இங்குவருக அரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூடிட வருக
என்றுபரிவு னொடுகோசலைபுகல வருமாயன்

சிந்தைமகிழு மருகா குறவரிள
வஞ்சிமருவு மழகா அமர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா

திங்களரவு நதிசூடியபரமர்
வந்தகுமர அலையே கரைபொருத
செந்திநகரி லினிதே மருவிவளர் பெருமாளே

---

## வேறுசந்தம்.

பெருக்கச்சஞ் சலித்துக்கந்
தலூற்றுப்புந் தியற்றுப்பின்
பிழைப்பற்றுங் குறைப்புற்றும் பொதுமாதர்

ப்ரியப்பட்டங் கழைத்துத்தங்
கலைக்குட்டங் கிடப்பக்ஷும்
பிணித்துத்தந் தனத்தைத்தந் தணையாதே

புரக்கைக்குன் பதத்தைத்தந்
தெனக்குத் தொண்டுறப்பற்றும்
புலத்துக்கண் செழிக்கச்செந் தமிழ்பாடும்

புலப்பட்டங் கொடுத்தற்கும்
கருத்திற்கண் படக்கிட்டும்
புகழ்ச்சிக்குங் கருபைசித்தம் புரிவாயே

தருக்கிக்கண் களிக்கத்தெண்
ணிட்டுத்தண் புனத்திற்செங்
குறத்திக்கன் புறச்சித்தந் தளர்வோனே

சலிப்புற்றங் குரத்திற்சம்
ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
சமர்த்திற்சங் கரிக்கத்தண் டியசூரன்

சிரத்தைச்சென் றறுத்துப்பந்
தடித்துத்திண் குவட்டைக்கண்
டிடித்துச்செந் திலிற்றங்குங் குமரேசா

சிறக்கற்கஞ் செழுத்தத்தந்
திருச்சிற்றம் பலத்தத்தன்
செவிக்குப்பண் புறக்செப்பும் பெருமாளே

---

## வேறுசந்தம்

கொலைகொண்ட போர்விழி கோலோவேளோ
விடமிஞ்ச பாதக வேலோ சேலோ
குழைகொண் டுலாவிய மீனோ மானோ எனுமானார்

குயில்தங்கு மாமொழி யாலே நேரே
யிழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நானே விதமாகி

உலைகொண்ட மாமெழு காயே மோகா
யலையமபு ராசியி னூடே மூழ்கா
வுடல்பஞ்ச பாதக மாயா நோயா லழிவேனோ

உறுதண்ட பாசமொ டாராவாரா
எனையண்டி யேகம னார்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ மீதா னருள்வாயே

அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்றா வாய்விட் டேவீள் மாசூ
ரணியஞ்ச ராசனம் வேறாய் நீறு யிடவேதான்
அவிர்கின்ற சோதியு வாபர் நீள்சி
ரனலங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூசக ஏகா வேண்ருர். வடிவாகி
மலைகொண்ட வேடுவர் காணாடேபோல்
குறமங்கை யாளுடனே மாலாயே
மயல் கொண்டுலாயவள் தாள்மீ தேவிழ் குமரேசா
மதிமிஞ்சு போதக மேலா ஆளா
மகிழ்சம்புவே தொழுபாதா தாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே

## கருவினுருவாகியென்ற சந்தம்.

அவனி தனிலே பிறந்து மதலை யெனவே தவழ்ந்து
அழகு பெறவே நடந்து இளைஞோனாய்
அருமழலை யேமிகுந்து குதலை மொழியே புகன்று
அதிவிதமதாய் வளர்ந்து பதினாறாய்
சிவகலைக ளாகமங்கள் மிகவு மறை யோது மன்பர்
திருவடிகளை நினைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகு கவலையா யுழன்று
திரியுமடியேனை யுன்ற னடிசேராய்
மவுன வுபதேச சமபு மதியறுகு வேணிதும்பை
மணி முடியின் மீதணிந்த மகதேவர்
மனமகிழவே யணைந்து வொருபுறம தாக வந்த
மலைமகள் குமாரதுங்க வடிவேலா
பவனிவரவே யுகந்து மயிலின்மிசையே திகழ்ந்து
படியதரவேநடந்த கழல்வீரா
பரமபதமே செறிந்த முருகனெனவே யுகந்து
பழனிமலை மேலமர்ந்த பெருமாளே

அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய

## திருப்புகழ் முற்றிற்று.



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீகோபாலகிருஷ்ண நாம

# சங்கீர்த்தனம்.

சடகோபர் துதி-வெண்பா

வண்டாருந் தண்டுளப மாயோ னடியிற்கற்
கண்டாருங் கீர்த்தனைப்பா கட்டுதற்கு-பண்டு
திருவாய் மொழியமுதைச் சேர்ந்தளித்த மாறன்
ஒருவாத் துணையா யுறும்

ஆஞ்சனேயர் துதி-வெண்பா

வாரிதிக ளேழும் வானும் புவியுமுண்டோன்
பாரியா லன்றிலங்கை பார்த்துவந்த-மாருதியே
வருதென்றன் வாக்கிருந்து மாற்றத் தொடுபொருளுந்
தந்துஉன்றன் நல்லருளுந் தா.

ஸ்ரீகண்ணன்றுதி-கலித்துறை

நீராழிவண்ணனைப் பாலாழிநாதனை நின்மலனைச்
சீராழியங்கைத் திருமகள்கேள்வனைத் தெய்வப்புள்ளூர்
கூராழிமாயனை மாலலங்காரனைக் கொற்றவெய்யோன்
ஓராழித்தேர்மறைத்தானை யெஞ்ஞான்றுமுறைநெஞ்சமே

கபாரதாஹா என்ற இந்துஸதான் வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

பல்லவி.

கண்ணனே கண்பார் கரிமுறையிடவரும்ஸ்ரீ (கண்)

அநுபல்லவி.

பண்ணவர் துதித்திடும் பன்னிருநாமா
பார்முழுவதுமுண்ட நர்பரந்தாமா
பகவுரு வாய்வரு மிகலரக் கனைமுனம்
பருவாயைக்கிழிக்குந்திரு சிகரதிண்புயாசலநற் (கண்)

சரணங்கள்

கோவர்த்தனத்தைக்குடை யாகக்கொள்மெய்யா
குற்றமில்லாதபரி சுத்தமனதய்யா
கொஞ்சுமாதர்களோ டஞ்சலக்கிரீடைசெய்
கொண்டல்வண்ணனேயுமது தொண்டனெனையே நீயாள.

பாண்டுபுத்திரரான பாண்டவர்நேயா
பாறயிரிநா யுள்ளிப் பருகிடும்வாயா
பந்தவினையால்வ ருந்தாமலிப் பாரினில்
பக்ஷம்வைத் தெந்தனையாளும் இலக்ஷுமிசமேதனன (கண்)

சங்குசக்கரமேந்தும் தண்மலர்க்கையா
தாசரதியே க்ருபை செய்வாய் ராமையா
தஞ்சமென்றுந்தனை யஞ்சலியுடன்பணி
தாசன் கலியாணசுந்த்ர னேசனக்மே மகிழும் (கண்)

---

கந்தநூதனே யெந்தன்மீது என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-சாப்பு

பல்லவி

ஸ்ரீதானன ரெகுராமா திருச்
சேவைதந்தாளும பாரந்தாமா (ஸ்ரீ)

அநுபல்லவி

ஆதாரம் வேறில்லே பூதலந்தன்னிலே
சீதா சம்மதா பூம்பாதா குழைக்காதா (ஸ்ரீ

சரணங்கள்

குன்றெடுத் தாயர்குல் காத்தாய் கோருங்
குஞ்சரத்தின் றுயரைத் தீர்த்தாய்
மன்றல்மலி சோமா கொண்டல்வணு நேமா
கோபியர்களிட மேகி துகில் கவர்ந்த (ஸ்ரீ)

நஞ்சமுதஞ் சொரியும் நாரிதனைத்
துஞ்சும்படி செய்தாயிப் பாரில்
வஞ்சமகம் நின்ற கஞ்சனுயிர்கொன்ற
கண்ணனே வண்ணனே விண்ணோரேற்றித்துதி (ஸ்ரீ)

பன்னக மிசை துயில் கோமா செழும்
பதும நயனஜெய நேமா
பொன்னார் மணித்தாரா இன்னல்தனைத்தீராய்
போதா பிரக்யாதா நன்னீதா விநோதாமா (ஸ்ரீ)

பந்தபாசத்தால் நொந்தேனே உன்
பாதந்தஞ்சமென வந்தேனே
சந்ததங்கல்யாண சுந்தரனும்பணி
தாமோதராமா பைம்பூமா நல்வாமா உயர் (ஸ்ரீ)

---

இராகம்-இந்துஸ்தான்.தேசிகம்-தாளம்-ரூபகம்

கண்ணிகள்

நெஞ்சமேயிந்த மானிடவாழ்வுநிச்சயமா
நிதநற்றசரத புத்திரர் பதமெய்த்துதி புரியமாட (நெஞ்)

அஞ்சலென்றோர்மனச் சஞ்சலந்தீர்த்திடும்
அனைஜானகி மனமேமகிழ் கனமாலினை நினையாப்பேதை (நெஞ்)

சீதமலருறை வேதனை யீன்றருள்
திகழ் தாமரை மகளுபகர் ஜெகநாயகர்பதமேபணி (நெஞ்)

குஞ்சரமுறையிட கொடுந்துயர்தீர்த்த
குலமாமறையறி யாதவரரியானவர் சரணீநினை (நெஞ்)

மாயமெனும்பந்த பாசமதைப்போக்கி
மலர்வாவியினிடை காளியன் முடியேறிய வடிவேபணி (நெஞ்)

மாமுனிவோர்பணி [illegible]தமலர்க்கோசலை
மைந்தன்றிருமண சுந்தர[illegible]திருவடியைத்துதி (நெஞ்)

---

மானேயினி நானே என்ற வர்ணமெட்டு

இராகம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி

இராமா பரந்தாபா ஏழையைக்
கார்த்தருள் புரி ஸ்ரீதரா (ரா)

அநுபல்லவி

மாமதுசூதனனே தேமர்த்தார்புயனே
மடுவினி லிடர்படு கடகரி யிடம்வரு [ரா]

சரணம்

கண்டகப்பேய் முலேயே யுண்டநற்கனிவாயா
கஞ்சன்வஞ்சகமன மஞ்சச் செய்யுமுபாயா
தொண்டர் நிதம் பணியுங் கொண்டல் நிரர்நேர்மாயா
துன்றுமாவின மகிழ்கின்ற வேயிசை வாயா
துகளுறு மலர்புனே திருவுறை தருமுரா (ரா)

ஆயர்பாடியிலாயர் சேயரோடும் அடுத்தாய்
அரியபெருவரையாற் பெருகுமாறி தடுத்தாய்
கரியவருமபகனே மாயும்வகை கெடுத்தாய்
கல்யாணசுந்தரன் மகிழ் பணிமிசையே நடித்தாய்
கவினுறு முனதிரு மலர்ப்பத மெனக்கருள் (ரா)

---

*இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்

காகுத்தனே எனேக்கண்ணோக்கிப்பார்த்துமேகார்த்துரக்ஷித்தருளும்
கருணகடாக்ஷனேகார்மேகவண்ணனேகாளிங்கநிர்த்தனனே
மாயாக்குழகனே மறைதுதிநாதனே மாசிலாஸ்யாமளனே
வாரிஜனேத்ரனே வழகுசத்பாத்ரனே வந்தெனேயாண்டருளே

தாரணிதன்னிலே தமியேனுங்கோரினேன் சாத்விகசரஸ்விதனே
தருணத்தருணமென்மேலகருணே செய்திடுவாயதண் டுளபத்தாரனே
சுதர்சனதுரைராமா நுஜதாசன்போற்றிடும் சுகம்பெருங்கடலானே
உதவிசெய்பெருமானே உம்பர்களகோமானே உன்னேயான்வேண்டினனே.

*போனாரேயின்னும் வரக்காணேனின என்ற வர்ணமெட்டு

இராகம் பியாகு—தாளம் ஏகம்

பல்லவி

தேனார்மலர்த் துளபத்தாரனே தேவா
தேடிமனதில் மிகனாடி (தே)

அநுபல்லவி

ஏனோ எந்தனையாளா திருப்பதேழை பங்காளா
வானோர்கள் வந்தித பாதனே
வர்மந்தானோ இதுவுந்தர்மந்தானோ தேவா (தே)

சரணம்

மறைபரவிடும்நிதி தரணியிலருள்கதி
துரைராமாநுஜன்றுதி ஸ்லாக்கியனே
உனைத்தானே தினமுந்துதித்தேனேதேவா (தே)

டாரே நாமெமுகம்மது என்றமெட்டு

*இராகம் பியாகு-தாளம்-ஆதி

கண்ணிகள்

கார்க்கவேவாவாகண்ணாபெந்தனை காளிங்கநிர்த்தனனேராமா(கா
ஆர்க்குமானந்தம்பொழிகின்றதேவா ஆனந்தமெய்ப்பரனேராமா
செஞ்சலக்ஷ்மிதினம்சேர்திருமார்பனேசேவித்தேனெனையாளாய்
வஞ்சனைசெய்யாதேவடியேனைக்கார்த்தருள் வாரிஜமலர்த்தாளா
கொஞ்சிடுஞ் சுதர்சனனே துரைராமா நுஜன்பணிகோமானேராமா

---

ஷோகிரக ரங்கரலியா என்றமெட்டு

*இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்

கண்ணிகள்

சுகமருள் வானவனே யாதவனே மாதவனே புகழ்
மிக்கவனே தக்கவனே மேலான என் மாலவனே
இலக்மி மனோகர னென்னுந் தயாபரா னைக்ருபாகரனே
சுதர்ஜன துரைராமா நுஜன் துதி தேவனே (சுக)

சகியா சகிஞ்சலேனே என்ற மெட்டு
* இராகம்-கமாஸ்-ரூபகம்-தாளம்

பல்லவி

அம்பரீஷப்ரஹ்லாதன் றுதிசெய்பரனே (அம்)

அநுபல்லவி

கிம்புருடர்கெருடர் சித்யவித்யாதரர் (அம்)

சரணங்கள்

நம்புமன்மறையின்மீது வம்புசெய்வதாகாது
வெம்பினேன் வெம்பினேன் வெம்பினேன் (அம்)

சுதர்ஜன துரைராமா நுஜன்துயர் தீர்த்தருள்
தூயனே தூயனே தூயனே (அம்)

---

நாமாவலி கைலே என்ற இந்துஸ்தான்மெட்டு
*இராகம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி

நாஹரிவுந்தனை நானுந்துதித்தேன்
நற்கதியருளும் ஸ்ரீமானே (நா)

அனுபல்லவி

கரிகிரிவரதா கருணாகரனே
கார்த்தென்ன ரக்ஷியும் பூமானே (நா)
கார்த்தென்ன ரக்ஷியும் பூமானே

சரணங்கள்

தரணியில் யானுந் தையலர்மாய்கையால்
தகைப்பட்டலைந்தேன் தானே
பரமுனக்கென்று பகுத்தறியாத
பாதகனுனேன்றிரு வரனே (நா)

சுதர்ஜனதுரை ராமாநுஜதேவா
சுந்ததசத்வகுண னே நீவாவா
உதவி செய்யுமுந்தன் மலர்ப்பதந்துதித்தேன்
வழியக்கருள்செய் யுயர்வேவரவரத (நா)

### எந்தன் தவத்தினுதித்தபாலரே என்றவர்ணமெட்டு

### இராகம்-முகாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆலிலைமேற்றுயிலும் நாதனே மின்னை
அஞ்சலிசெய்தேனே அம்பொற்பாதனே
நந்தகோபன்மனைவாழ் மாயனே பாச
பந்தமகற்றிடுஞ்ச சகாயனே
பஞ்சபாண்டவர்தூதா ஸ்ரீதரனே எழில்
செஞ்சரோருகபாதா சிவரனே
அலகைமுலைப்பாலுண்ட ஐயனே திகழ்
பலகலைகளையாய்ந்த மெய்யனே
வஞ்சகக்கஞ்சனைக்கொன்ற தீரனே உலகை
கஞ்சவடியாளலந்த வீரனே
கரிமறைதனக்கருள் துங்கனே யான்
கதறினேன் கண்பாரேழை பங்கனே
தாதலர்த்துளவணி நாரணனே உயர்
மாதவர்புகழ்ஜெகத் காரணனே
கல்யாணசுந்த்ரன்பணி கண்ணனே மகிழ்
நல்வரம் நல்குமுகில வண்ணனே

---

### கானகத்தில்நானலைந்து என்றமெட்டு

### இராகம்-தேசிகமுகாரி-ரூபகம்-தாளம்

கண்ணிகள்.

ஸ்ரீதரனே யானுமிங்கு தியக்கங் கொள்வது தகுமோ
பாதகனை யாண்டருள்வாய் பங்கயக்கண்ணு வாமயா (ஸ்ரீ)

மாதர் மக்கண் மயலால் மயக்கமிகக் கொண்டேனே தேவா
கோதிலாதகுணககடலே குன்றமேந்துமேவாயனே மூவா (ஸ்ரீ)

மண்பெண்பொன்னாசையினால் மர்க்கடம்போலானேனே ராமா
கன்மமென்னசெய்தேனைய.. கருத்தறியேன்சர்வபூமா (ஸ்ரீ)

சுதர்சன ராமாநுஜன் சொல்முறை கேட்டருளும் நாதா
கதரியே ஓலமேலிட்ட கரிதனக்கருட் ப்ரக்யாதா (ஸ்ரீ)

*இராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்

பல்லவி

ராமாவன் றிருவடி நேமமுடன் றுதிக்கும்
நாயேன்மேல் வர்மமாமா (ராமா)

அநுபல்லவி

பூமாதுடன்சிறந்து தாமதிக்காமல்வந்து
க்ஷேமகரத்தைத்தந்து சீரருள்வாயுகந்து (ராமா)

சரணங்கள்

ஆமாயிப்படிச்செய்ய லாமாயென்றடிக்கடி
பூமாஉன்னைக்கோரியும் புல்லனுமேமிடி
காமக்குரோதத்தாலே கஷ்டமிருத்தலாலே
ஸ்ரீமானேஅவைதீர்த்து திருநோக்கருள்மென்மேலே (ரா)
மதமாச்சர்யமகற்றும் மாமுனிவர்துதிக்கும்
சுதன்சொல்கொண்டருள் சுரந்து பெற்றோர் களிக்கும்
கதிபெறக்கோருநதுரை ராமாநுஜன் றனக்கும்
கொடுத்தருள் செய்திடகுறை நீங்கியே செழிக்கும் (ரா)

அவனியில்யாரேனும் அனியாயம் செய்வாரானால் என்றமெட்டு

*இராகம்-கானடா-தாளம்-ஆதி

கண்ணிகள்.

புவனரக்ஷகனேஉன் பொன்மலர்பதந் துதி
புரிந்தேனென்னையாண்டருள் புருஷோத்தமாயித்தருதி (புவ)
நவனீதமுண்டஸ்ரீ னிவாசதேவாவுனை
நாடித்துதித்தேனே நற்கதிதந்தருள் துணை (புவ)
அவனியில்யானுமே அதம நடனே கூடி
தவனன்னெறியிழந்து தத்தளித்தேனமனம்வாடி (புவ)
தபனகுலதிலக தாசரதே ராமா
சுபகுணசர்வ பௌமா சுந்தரமிகுசோமா (புவ)
சுதர்சன துரை ராமாநுஜப் பொருளானே
சுத்தசைதன்யனென்னும் சுகந்தருங்கடலானே (புவ)

நூறுதரம் மாறி மாறி என்றமெட்டு

*இராகம்-செஞ்சுருட்டி - தாளம் ரூபகம்

கண்ணிகள்

ஆலிலைமேற்பள்ளிகொண்ட நீலமேகஸ்யாமளனே
ஆனையைக்கார்த்திடவந்த ஐயனேகிரியாற்
சோனைமாரியைத்தடுத்த கையனே (ஆ)

தாலமதிலுன்புகழை சாலவுந்துதிசெய்திடும்
தாசனெருனுவதுவும் போதுமோ ஸ்ரீனி
வாசனேயெவர்க்குமெளி தாகுமோ (ஆ)

வேரியங்கமலைநிகர் நாரணா உந்தனடியை
வேண்டிக்கொண்டேனெந்தனைவந் தாளுமேபுகழ்
பாண்டவர்சகாயா எந்த நாளுமே. (ஆ)

சீதளச்செந்தாமரையின் மாதர்தினம் மகிழுறும்
போதந்தர வேண்டுங்கனி வாயனேஎன்றும்
பேதகமெண்ணுதருள்செய் தூயனே (ஆ)

உத்தமகுணத்தனேயுன் சித்தமகிழ்ந்தேயென்றனைப்
பெற்றவாவந்தருள்செய்ய வாருமேராமா
எத்தேசகாலமுங்கண்ணுற் பாருமே (ஆ)

சுதர்சனதுரைராமா நிஜதாசனசொலுமுறை
சுந்தரவதனுததி கேளுமே உவந்
துன்றனருளதை சதா (சேருமேஆ)

---

*என்னடிநான்பெற்ற மங்கை என்றமெட்டு

*கண்ணிகள்.

நந்தகோபாலா யென்மீது இந்தவாது செய்வதேது வெகு
விந்தையதாகுமுன்சூது நக
தரகக வாகனஹரி யிகமீதிலென்பவம் பரிஹரி
சுந்தரமான கோபாலா பாவ
பந்தமகற்றிடுஞ் சீலா (நந்த)

பாருலகிற்பாவிபிறந்தேன் உனைமறந்தேன் தர்மம்துறந்துறந்தேன் து
பாவையர் மோகத்திற் சிறந்தேன் தத் [ஷ்ட
யாருந்துணையிலை பேகதி தாரும் ஸ்ரீபதியேததி
அண்டத்தை யுண்டசெவ் வாயா திரு
புண்டரீகாக்ஷனே தூயா (நந்த)

ஐவரைக்காத்த சகாயா உபர்நேயா மிருதாயா என்னை
யாண்டருள் செய்திடும் மாயா என
தய்யா யெனக்கிங் கார்த்துணை மெய்யா உனக்கார்தாவிணை
யம்மவனுன நந்த பாலா க்ருபை
செய்தருளானந்த சீலா (நந்த)

துரை ராமாநுஜநற்பொருளே வரமருளே தனிப்பொருளே ஜெக
மீரேழும் மொண்டாடும் அருளே சூழ்
தரைதனி லுயிர் கிருபாகர மறையோர் துதிதருள்சேகர
சாந்தனே இக்ஷணம் வாரும் லைக்ஷமி
காந்தனே எந்தனைக் காரும (நந்த]

---

வாழித் தரு.

காருலாவு மேனியன் கண்ணனென்றும் வாழியே
கழருகின்ற மறைகளுங்கற்ற வேதியர் வாழியே
சீருலாவு திண்டோள் மார்பும் திருவாழ்மார்பும் வாழியே
தேவரு மூவருந்திரு மாலடியார் வாழியே
தாரணியில் மற்று முள்ள ஜீவகோடிகள் வாழியே
தக்கவன்னுமம் புகலும் தாசரென்றும் வாழியே

---

மங்களத் தரு.

செங்கமலையாள் வளர்ந்தோக்கும் பூமனேமங்களம் சுபமங்களம்
பங்கேருகாக்ஷனே பார்கடல் வாசனே மங்களம் ஜெயமங்களம்
பங்கமொன்றில்லாதருள் பரந்தாமனே மங்களம் சுபமங்களம்
பொங்கும் பாகவதர் பூஜிதசுபகா மங்களம் ஜெயமங்களம்
சங்கு சக்கர மேந்தும சுபாநிதி மங்களம் சுபமங்களம்
இங்கிதனுஞ்சதர்சன துரைராமனே உனக்குமங்களம் ஜெயமங்க
புங்கவர் முனிவர் பூஜிதனே ஜெயமங்களம் சுபமங்களம் [ளம்
துங்கமிங் கோபாலகிருஷ்ணனன்றனக்குமங்களம் ஜெயமங்களம்
சந்ததமும்உந்தன்பாதம்பணிவோர்க்கு மங்களம் ஜெயமங்களம்
மைந்தன் கலியாணசுந்தரன் றனக்கு மங்களம் ஜெயமங்களம்

முற்றுப்பெற்றது

---

இதில் *இவ்வடையாள மிட்ட தருக்கள் ஸ்ரீமான் சுந்தரா ன துரைராமாநுஜதாசரவர்களால் இயற்றப்பெற்றவை பாகவ தோத்தம பக்தசிரோன்மணிகள் பலரும் பன்முறை வேண்டிய தற்காக இத்துடன் சேர்க்கலாயின.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம;



## கோபாலகிருஷ்ண நாமசங்கீர்த்தனத்

# திருப்புகழ்

வங்கார மார்பிலணி என்றகெட்டு

மந்தங்க ளானமன தொன்றுவினை ரண்டுகா
ணம்பந்தி மூன்றொருப தென்றதனில் விஞ்சியம
னைம்பங்கி னாலுபொறி யைந்துபுல னைந்திவனொடு    துர்விகார

வஞ்சங்க ளாறுமுட னின்றுவள ரும்பகையி
டங்கொண்ட வீடுதனை யென்புதிர முங்குழுமி
மண்டுந்த டாகநெளி யும்புழுவி ழுங்குழிமொய்    வெகுரோம

பந்தங்கொள் காடுயிர்வி டும்பொழுது தந்தைபரி
யந்தந்தொ டாதபிண மிக்கிதுசு மந்துபடு
பண்பொன்றுமோகமுழவி நன்றுபதனஞ்செமினு    முடைநாறு

பங்கங்க ளோமல நிரம்பிய குடங்கரவ
கந்தங்களோகடின மெனசெலவ துடம்பனுப்
வஞ்சிந்தி யர்துனது பங்கயபதம்பணிய    வருவாயே

அந்தந்த வேளைசமயங்களவை கண்டுதவு
கண்கண்டதேவுமுனை யன்றியிலை யென்றுனத
ரண்கொண்டு ளோர் நமுசிசம்பரகளனும்பகை    முரவாலே

யண்டங்கள் யாவையுமலைந்தமர ருங்குலைகு
லைந்திந்தி ராதியரு நொந்துளைவ ணங்கவத
றிந்தஞ்ச னீரெனமொ ழிந்தவர்செ யக்கொளரி தெனநீதி

சிந்துங்கு பாகரனைக்கண்டவர் பிரிந்து சித
சம்பந்தமாகவழி கண்டவரை வென்றபசெ
யங்கொண்ட வானவர்களிந்த்ரபதமுங்கிருபைபுரிவோனே
தெண்கங்கை நீர்புரைத டம்புடைகி டந்துசொரி
சங்கங்கள் கோடிமணி சிந்தியவ ளம்பெருகு
அம்பொன்செய்கூடல்நகரந்தழையநின்றுவளர்பெருமானே

---

ஆளகபாரமலைந்து சரிந்திட என்றமெட்டு

மலைவளர்த்தவ ரார்வன கங்கெழ
விதை விதைத்தவ ரார்கட லின்சல
மறுபெருக்கின தார்நதி யின்றதை புனலோடி
வரவிறைத்தவ ரார்மிரு கங்களி
ளிரைகொடுத்தவ ரார்கக வங்கிச
வரைவுகட்டின தார்கய லெங்கெணும் விளை யாட
நிலைமையிட்டவ ரார்மல ரின்புது
மணமளித்தவ ரார்பகி ரண்டமு
நிலைநிறுத்தின தாரிவ டங்கலு நினைபோதி
னினதுரட்சக மேயவ திங்கனி
பெவர்கள் ரட்சக மேதுசு தந்திர
நினைவெடுத்துனை யாரு மறிந்தில ரவபாவா
ரலைகடற்றுயின் ஞானபரம்பர
கமல லக்ஷுமி நாயகநம்பர
வதிப்ரமச்சரு வேசநி ரந்தர நெடுமாலே
யதிகலட்சண பூரண சந்திர
சருவரட்சக நாரண நந்தன
வடலெயிற்றசு ரேசர் மடிந்திட வமரூடு
சிலைவளைத்தக்ரு பாலது ரந்தர
வடியருக்கெளி தாகியிருந்தவ
சிவனையற்கரி தாகி யுயர்ந்திடு முரவோனே
திருமறைப் பொரு ளாயிரம் விண்டரு
ளொருதிருப்பர காலர்வ ளங்கிய
தெரி தமிழ்த்திருக் கூடலில் நின்றருள் பெருமானே

---

கருவினுருவாகி வந்து என்ற வர்ணமெட்டு.

அறிவழிய வேபிறந்த தவழ் குழவி யாயிரங்கி
யழு தழுது காலுதைந்து　விளையாடி

யறிவினுட னேவளர்ந்து மகளிர் மயலா லெறிந்து
அறவயது போல்மருண்டு　குருடாய்நீள்

பொறிவழியெ லாய்யங்கி புறைகள்தடு மாறிநெஞ்சு
பொருமலென வேகசண்ட　னுயிரோடு

பொருதடரும் வேளைகண்டு கருடன்மிசை யேறியன்பு
புரியவிரை வாயெழுந்து　வருவாயே

நறியமுகை தாதளைந்துகொழுது மறுகால் குடைந்து
நறையொழுகு பூமடந்தை　யணியார

நகைவிரிப டீரகொங்கை சுவடுபடவேயெதிர்ந்து
நடனமிடு ராஜதுங்க　மணிமார்பா

மறிபுனலி னூடலம்பி யிளையகரு மேதிசென்று
வளருமத வேலியெங்கு　மளருடி

மணமொழுகு வீதியின்கண் விலைமகளிர் போலவந்து
மருவு முறையூரில்நின்ற　பெருமாளே

மலடிவயிற்று மகன்போல என்ற மெட்டு

அடுபோ ரட்டதி சாகச பந்திகள்
பொருகோ டற்றடி யோடுமுறிந்திட
வயில்வாள் பட்டவை வாய்கண்மடிந்திட　விடமுறு

மடல்சே ரட்டம நாகம்வெ குண்டுபற்
கடிவாய் புத்தமு தாறு சொரிந்திட
வழல்வா யக்கினி நீரினளிர்ந்திட　விதலாதே

உடலோ டக்கடல் வாயினடைந்தகன்
கலையோ தெப்பமே னுமிசை கொண்டிட
வொழியாமற்பகை யாவும்வ ளைந்தன　தொடாதே

யொருபா லற்கரு ளோகனி தந்தவுண்
னிருநா லக்கர மேன்மைய டங்கலு
மொருநா ளிட்டடி யேனுரை தந்திட வசமாமோ

வடவா வக்கினி சீறியெ ழுந்தபின்
னிலநீ ரக்கினி வாயுவிசும்பென
வளர்பூ தத்தொகை யாவு மழிந்துக முடிநாளில்

வடவா லிற்சிறு சாகையி னந்தளி
ரனைமீ திற்பதி னுலுல கங்களும்
வயிறு றச்சிறு பாலனெனும்படி துயில்வோனே

செடநீ றிட்டருண் ஞானப ரம்பரர்
வளர்சே டப்புளி நீழலி ருந்தவர்
திருவேதப்பொரு ளாயிரம்விண்டடி தொழுமாலே

சிறைகோ தப்பெரு நாறையிளஞ்சிறு
பெருநா ரைக்கிரை தேடிவி ரைந்திடு
திருக்கூ டற்பதி வாழவிளங்கிய பெருமாளே

## ஸ்ரீ கோபாலகிருஷ்ண நாமசங்கீர்த்தன

## இந்துஸ்தான் பஜனைத்திருப்புகழ்

முற்றுப்பெற்றது,

மகா-ா-ா-ஸ்ரீ ஹிந்துஸ்தான் K M தர்மலிங்கம்பிள்ளை G N சாமி நாதமுதலியார் கானமோகன T A இராஜாமணியம்மாள், ஜெகன்மோகன குப்புசாமிமுதலியார் மனமோகன அரங்கசாமிநாயுடு இவர்கள் பாடிவருகிற

# ஹிந்துஸ்தான்

# பார்ஸி பதங்கள்

(1)ஜாவோஸகிபிய்யாஸே பிய்யாமிலாலேவ்
தும்ஜாவோநாதான் ஹைமோராகுருபான் தும்
ஜாவே புலாவே பியாரே புலாலேகு ஆவே (ஜா)
பேரேஸேதில் அம் ஜாயிங்கே எஜி
ஆவோஜி காவோதும் பியாரேஸேமில்னேகுஹானு (ஜா)

---

(2)பியாஹாவோனு அரே
பியாரா அமாரேகுமிலாவோனு (பியா)
ஹைமிலாவோ ஷபுராவோதும் ஆவோஜிகாயதும்
ஹாவோனு பியா ஹாவோனு அரே (பியா)
ஹைமேராசனம் அம்
தில்ஸேலகாயிங்கேதும் ஆவோனு (பியா)
அம்தோனேமிலாகேகைஷ சாவுங்கே பியாரேதும்
ஹாவோனு பியா ஹாவோனு அரே (பியா)

---

(3)ஸொபசகிபாம் சாவாரியாம் மோகனிபான் காவோரி
ரமஜுமெ ரமஜுமெ பாரீஜவானி
தாலிபஜாகே நாச்சோரி (தாலிப) (ஸொப)
அமேரேஸேதில் காயுங்கே ஆவஸகிலாச்சோங்கே
(ரமஜுமெ) (ஸொப)

---

(4) தும் ஆவோஜி மேரே பியார்
அம்தில்சேல காயுங்கே
தோனேமில சாயுங்கே(தும்)
அமசானு நதிக்கினரே கானு
தோனேமில ஜானு கானு பானிரே
அம்மாரே ஜோபன்கு தில் ஸேபடிஹை
காயுங்கே ஆவோதும் மிலாலேக்கர்ஜானு (தும்)

(5) கிஸ்கே புராசஞ்சால் கிஸீஸே
தில்னலகானயரோ தில்னலகானு
ஹௌரஷகேகுருபான் கிஸீஸே(தில்)
மேரிமரீஜே தில்கிஹைஹபனி
தோனமிலாஜாவ் ஆவுங்கபியாரா
ஹௌரஸகேகுருபான் கிஸீஸே(தில்)

(6) பியாபினேஜி யானேதும் தலுமலாயி கலுனஹாயுரே
தலுமலாயி தலுமலாயி கலுனஹாயுரே(பியா)
வோமங்கஜோபன ஜோனிஷவாரியரம் மோகனபாயுரே (பி)
பத்தலஹரஜ பிக்சலிஜேமுஸே
தாத்ருவமாரி ஹரஜலஸாம
பிய்யாக பூவாகருக்கு க்குடாலியாம் ஜீயாட்டலாயுரே (பி

(7) ஐஸாநாலேநாலே ராஜ் தா வனுஜடுக்கனுஜானு
ராஜனுஹேரயா ஹோ தில்பர் ஸோஜனுஹோயா
ஆஸபீரா தஸ்தகீரா ஆஷபீரா பேஷமான்
ஆசமன்கி பன்மேரிஸான் தூபரிசன் பேஷமான்
தூபகிஸ்தி ஹௌசி தி மேரகிஸ்தி மோரிஜான்
ஆசமன்கி பன்மேரீஸன் தூபரீஸன் பேஷமான் (ஐ)

(8) சலோ சொய்யாட மார்க்கசலோ
பிய்பாஸஜனதோரி ஜாயுங்கே

ஆவேஸஜனதோரி ஹாய் ஹாய் மிலாவே
மில்வோரகி ஷகத் மேரே
மரிஜகி ஹாவ்
லாவ் லாகிலாவே பேனங்கிலாவ்
ஊனுேமிலாவே மதுபதுலாவே
மனுேஹர ஹாவேஜி பியார் (சலோ)

---

(9) திருச்சனச்சாரியாம் மாரிகடாரியாம்ஜான்
மைவாரி மாரீகடாரியாம்ஜான்
அரே ஹாய் ஹாய் மாரீகடாரியாம்ஜான்
மேரே பிய்யாஸே
மேரே பிய்யாஸே
மேரே பிய்யாஸே
தில்லலல்லஜாவே மேரே
ஆஸ்க்ஸெனை னுேலகாவே
ஜாலடகல் ஜாலிடகவ்
அமேரஜோர் ஜோரேசல்
டுமகடுமக சல்கலே
ஸெலகாயி ஆவே
அஜாரேதில் தாரஹமாரா

கலேசலகாயி ஆவே (திரு)
கோரேபதனுவா ஜானீகி குண்டலிஜான்
மேமே வீனேஸே
மேரே வீனேஸே
ஜோபனஜாவே மேரே
ஆடித்கூந்தன ஆவே ஜாலகடவ் ஜாலகடவ்

---

(10) ஹிஸ்கு பேகல்மே ஹோமைன ஹாருவஜான்
ஜாலாகோபியாமைன டாருவா
ஹோ டாலிஹைமெரா டாலி
ஹோ பிய்யாஹை மெரா பிய்யா
பியாரஹைர மதுவாபி (ஹிஸ்)

சந்த்ர தயாம்தனி பிருகலசனியாம்
பியாரி மோகனியாம் குலலாவே (ஹிஸ்)
ஆவொஜி பிய்யாரே மேரேசாத் அம்
தோனேமிலே ஜாயுங்கே ஹாவ்
ஹாமாதில்ஸே படிஹைமேரா (ஹிஸ்)

---

(11) மேரேசையா ஜமுனுமே பன்வஸி பஜாய்
மேரேசையா ஜமுனுமே பன்வஸி பஜாய் (மேரே)
தூண்டதி தூண்டதி பியாக்கு அப்னே
ஜங்கலுமே ரத்தியாஜகாய் (மேரே)
லாஸுகரு கேபிபா பீரத்தவாரி
பீத்து கருக்கே ருலாய் (மேரே)

---

(12) முஷ்கில்க ரோதும் ஆஷானி
பீரஹமாரே மாபூபேசுப ஹானி
தோஸ்த அல்லாக் கேபியாரே நபிக்கே
தும்ஹோ அலிக்கே திலோஜானி (பீரஹமாரே)
பாரா பர்ஸுகி கிஸ்தீக்கு மோரே
பாரஹியா ஹோலாஜானி
பீரஹமாரே மபூபேசுப ஹானி (பிராஹமா) (முஷ்)

---

(13) வாரிஜாவோரே சாவரியான்
தும்பர் வார்னுரே கஞ்சர் மார்னுரே (வா)
தனு மனு தனுமனுசே தும்
பருவாரி ஜானு மானுசே தும்பங்கிசாலும்
கப்தாகாதில் பன்கர் நஸ்த்தர் மார்னுரே
கஞ்சர்மார்னுரே (வா)

---

(14) சையான் தோரே பையாய்
லேக்கோகையாம் நமூரா
மைஜான் கிஸ்கே ஆவோஜி பிமாராதும் அரே [சை]

னிக்லே சனுஜாபியாரிக்கு லாவோஜானி
மைஆத்தி ஹறமை சாவரியான்
மைதில்ஸே காத்திபியா ரேஷான் அரே (சை)

---

15 பியோ பியோஜி ராஜா ரங்கீரம்
ரம்கி நரம்ஹை ரம்கி நரம்ஹை (பி)
ரம்ஹை கெய்சே பியோ
ஷராப் கெய்சே பியோ
பியாகு தேக்ககுஜே ஆயமுஜேதான் (பி)
துக்கான்குஜாஹ தோனேஹம்பீஹ
மேரேதில்ஸே தும்ம ஆவோஜிபியார் (பி)

---

16 மேரே ஜான்ஸே ஆத்தாரேஹமை
பியாக்கு தேக்கே லாவேஜி கெய்ஸே (மே)
ஹைமோராநாதான்கே ஜோபனுவாலே
இங்கே மேரே
ஆவோஜி ஸியாமத்துவாலே எஜி
மேரே ஆவோஜி பியாக்குதேக்கே
ஜானீஸே ஆத்தாஹமை (மே)
மைகெய்சேஜிஜாவும் நதிகி நாரியான்
ஐமேரே ஜோபன் தும் ஆவோபியாரா (மே)

---

17 அரே ஆவோஜி தும்பியாரா
மேரேதில்ஸே காத்தும்ராஜா
கிஸ்திக்கு வாஸ்தே புலாயி
மை ஆத்தி நை ஜானி ஜாவ் (அரே)
துலகயரு
ஆவ்மோராசனம் அம்
திவ்ஸேலேகானுதும் ஆவோஜிமோராபியார்
முஸ்கில்கைக்கு புலாத்திஹை ஜானிஜாவ்
அம்கெய்ஸே ஜஎஜிகரா ஜாதும் ஆவோ

மைதில்ஸே காத்திரே ஆஜாவ்சனம்
மைநை ஆத்தா கெய்சே
பூலாத்தி ஜாவோரி ஜானி ரஸ்த்மே பெஜாவ் (அரே)

18 மோராபியான்ஸே ஆவ்
அமேதில்ஸேலகாயே மோராஜானி
தில்சேலகாயே ஜான் மோராகுருபான்
அரேதோனேவ் மிலாயுங்கே மோராஜானி (மோரா)
சாடிதேத்தாவும் சோலிபிஞதும்
அரே ஜானி மிலாஞ தும் ஆஞ ஹ
காயுங்மே தில்செல காய் மோராஜான் (மோரா)

19 சுந்தரப்பியாரிமைஹோ நரியாலபேலி
நரியால பேலிமைஹோ நரியாலபேலி (சுந்)
ஸதுரஸபாலகோதும் பானுமேபஞதும்
ஏக்கத்தலாதேஹைகோ தானுனேபடேலி (சுந்)
றாஹே பதன்மேஹைத பானஜீகூஹை ஸேபேலி
ஜலத் கோபரை ஹேமைஹோ போஜானபிருகமேலி (சுந்)
பாதஸபா ஜோஸஹம்தம் பாகமேஞஸ ஸேவீலி
நகலநிகா லோஹோரக யிபுககயீக வலீ (சுந்)

20 துனியாஸாரி ஸபஸெளஜட்டி
ஜிஙட்டாஸ்பஸெள ஸாராரி
மானுக ஜீஞஸபஸவ் லதஸப
ஜோபன ஔரத வானீரே
ஹாவே குதஹோ ஜாவோடதஸே
ஹாவே இதஸம் ஸாராரீ
பனுமே . பலமே பலஜங்கல்மே
பலமேகல்மே தலபாதலதே (துனி)
ராமமேயோ ராககபூலே
நிக்லேதிஹோவோ மேபகா

ஹாவேகுதஹே ஜாவோஉதஸே
ஹாவே இதஸம் ஸாரரி
பனுமேபலமே பலசங்கலமே
பலபேகல்மே தலபாதலமே (துணி)

ராமமேயோ ராமகபூலே
நிக்லேதிஹோவே பேகா
ஹாவே இதஹே ஜாவோஉதஸே
ஹாவே இதஸம் ஸாரரி
பனுமே பலமே பலசங்கலமே
பலபேகல்மே தலபாதலமே (துணி)

21 தில் தாரியாரே சேலம்ஸே நைனேலடாயிங்கே (தில்)
நைநோலடாயிங்கே சருமாலகாயிங்கே (தில்)
யார்மோர ஆலா ஜோபனுமது வாலா
சூரத்மேரி ஸையாங்கி மன்கூடுபா யிங்கே (தில்)
பம்பாய்க்கு ஜாவுங்கி சாடிலக்காவுங்கி
சாடிபர் சம்கி சடாகர்பி னுவுங்கி (தில்)
ரெங்கோன்கு ஜாவுங்கி ரோலீலகாவுங்கி
தர்ஜீக்கு தேக்கே விலாக்கே பினுவுங்கி (தில்)

22 தில்தாரெதிலாரா திலபருஹே தனுமனு
தனகுரு பானுகரே
கடிகடிதாதா பிரதபிரததில்
தடப்பத்துஹே தில் தடப்பத்துஹே (தில்)
நிகாஹை பேருகாதில் பர்லாஹை
நிகாஹைபேருகா நாசோசலாஹை
கிஸீகே ஹங்குலே பஜாங்சே சௌதா ஹை
மோாதில்நூர் பரிநாசோ சலாஹை (கடிகடி தாதா)

23 தேகோ பாலம்கே நாகராவ்
தில்ஸே ஹமாரே எஜி பாபராவ் அரே
வாலீ மேலா லீவோ தூரவுனே வாலீயாம்

அத்திரே அத்திரேமே லாலிவோ
கேஜுரா பஜம்து வாருணு
நீக்லேயிவோரதி பாபராவ்அரே
கல்லிகலியேஜி பூலாங்கலியேஜி பாபராவ் (தேகோ)

24 ஆவோ ஆவோன கரியாம் ஹமாரீரே (ஆ)
ஹமாரீ ஹமாரீ ஹமாரீரே (ஆ)
ஜோனபாக தில்யாமே போஜன்கபேரீ ஷே
கியா கியாத்தோரா சலோசாயுங்கே (ஆ)

25 தோரிமிட்டேஜி மிட்டேதோரகலியாம்
பியாரிமிட்டேஜி மிட்டேசாவரியாம்
தில்பேஜான் பேகுமரன்
ஹாய் ஜான் ஜான் ஜான் கியாவே1 மான்மான்மான்
போல் வோல் தான் தான் (தோ)

செக்க மசக்கப் பியாரா ஆஷ்க்கு தேஹைத்தோரி.
ஆவிங்கே ஜாவுங்கே டேப் டேப் டேப் பியாரி
டேப் டேப் டேப் பியாரி டாப் டாப் டாப் (தோ)

26 ஹாயமுஜே தர்தேஜி கர்னேஸ தாயா
மேரா பியாராநஹி தில்ஹையாரா நஹி
கோயிசாராநஹி ஹைஹகுதாயா ஹாய்கொயி
சாராநஹிஹைஹகு தாயா மோரபியாரநஹி தில்ஸஹ (ஆ)

தொஹைரா

பிகாமே ஆகமே பரியாத மேசைவன் மிஹுமே
சுனுவும் தர்ததில் அகர் வொய்சா
சுனுவாலேமே கபரமே ஸ்ரீகாம் கருவடே அர்கம்
பதல்தேஹிகா சூல் சூல் ஹுக்தாஹை
பயல்வோ பதல்தேஹி
அதலேபி தாஹுமிலா
பூராசப்பாஹுமிலா தில்குவுஸ்தாதுமிலா

சத்ரு ஜல்லாதுமில்லா சாஹிந்தே கித்தனமில்
பிஸ்மஹும் யாத்தே ஜாத்தே ஆயஜாலிம்
ஆபஜாலிமே ரஹமனுகாயா மோரா

---

27 மஜாமேதத்தே ஹோகியா யார் தேரே
பாலே குங்குரு வாலே தேரே பாலே குங்குரு வாலே
தேரே பால்குலாயி வாலே மஜா
ஃபலதிதி தகுரார் தாமே
சர்த்தே வோ கெவ
பியார்தேரே தரப்லே
யார் எஜி மேரே தில்மே
படுகையி சாலே மஜ
தோதின்கா மேகமாம்
அரே ஜத்து புத்து
செய்ஸே மிலாவ்
ஆவோஜி மோரா பியார்
அய்தோனே மிலானேவாலே மஜா

---

28 ஹாரே நர்தா பிரஸ்காந்தே
ரேகலீக ஆயோரே
ரத்தியான் ஸோத்தியான் ஸோத்தியான்ஸே ஹாய் ஹாய்
அபரமேதன் ஹாய்முஸய்யே
யார சோஷிகே
ரத்தியான்ஸே ரத்தியான்ஸே ரத்தியான்ஸே ஹா

---

29 சமகத்ததன சடகு மொடகு
லடகு ஜலதஜாணி சலத்தபிரதஜாணி
சுந்தர சுந்தர ஷகரனுற்
கரத்த கரத்த ஸோலசிங்கார்
அஹடபபன சோபனபேதன
ஜீயாரஹரத்தஜாணி ஜீயாரஹரத்தஜாணி (சம)

ஷபாபுஆதஹிஹங் காமுமேஷவூராயா
நீசாரஒசகுவா நீஸ்மேநேரே நூராயா
ஒியாலதிலயேஸபர் ஒங்கேபேகுரூராயர்
ஆசாராசஸாஹை தாகுவாருநூராயா
மலசமலசகுலசடகர குசிலகேதிலஜானிசல (சம)

30 வவ்வாஜி வாஜிவான் வானுவான் ஜீபடே
டாம் டேம் கைஸேபஜே
சோடேஜி ஹைசேகி பாத்அரே ஹாய் ஹாய்
சோடோஜி ஹை ஸேகிபாத்
ஜாவ் ஜாவ் லக்க லக்க பாவ் பாவ் (வவ்)

ஜாதிநக்கர் தேக்கோ ஜமானக்கர் தேக்கோ
சோடோஜி ஹை ஸேகிபாத்
ஜாவ்ஜாவ் லக்க லக்க பாவ் (வவ்)

31. ஸய்யாமுஜே ஆத்தோங்கி கங்கன்பனுத்தே
கங்கன் பனுத்தேஸய்யா பவுன்விபனுத்தே
கங்கன்பனுத்தஸய்யா கோன்வி பனுத்தேஸையா
கோன்வீ பனுத்தே
தோரிமோரிஜானஸே ஹைகுல்ஜானஸே
அரசல்சல்சல் தோரிமேரி ஜானஸே
ஐகுல்ஜானனே சல்சல்சல் (ஸய்)

32 தும்ஸ்பஷகரி ஸமஷகராம்
ஸமசல்மேபணிரி மைபஹராய்
சலசலமனுசல சலபலமதுசல்ாஹத்
மேபஹராம் மூவேவஷதாம்
கடு படு கடு படு மதரகமில்கா
மக்கம் பக் மக் கெத்சுல்தான்
ஏர்மமானே ருகுபதி பாகல்வோ
ஷாகதி கேலனு ஈ அச்ர
சலடமூவா பத்தாகியாஹோ

ஷகது ஆபானே தூஜான்
இதார உதார கூசார பூஸார
நடராஹ்ஜாவும் ஜாவோ கெஜவான்
தியாவேரி நாரிதும் தோபிகுல் தேனுட
அயை அயைய அயைய ஹாய்
பாயிலதபடி கர்ஸே சுன
பாயிலதபடி கர்ஸே து
கஞ்சரிலேகர் கர்ஸேஅவ்ர
ஷாதிகருங்கா டர்ஸே
அல்மேரி தேவுங்கா நதுபியாரி(தும்ஸ)

---

33 எஜிமான மயா ஞகரு ஞாரே ஜோகி
ஜாணேக டாப்பி தாஞ ஹாயா
ஜாதிபதாயா மாதினிமாயா
ஜாதிபதி ஜோபன் ஹாயா
ஞாலத்து சுமதி யாலாத்துயாலா
பாலிதபாண்டித ஹாஞரே ஜோகி
ஜாணே கட்டாபி தாஞ ஹாயா (எ)

---

34 கபரதாஹா லகாயமோஹ நாரிரே (கபர)
தீனபான்சமோஹ ஏககுணபாவே
தூரதூர மகளும் துஸ்தே பர்தோவரீரே (கபர)
ஜனமே ஜனமே தோரா நித்யகுணமானே
ஜாஸதுஸங்க ஸேமிலரோம்
அரத்தமை பிரத்தமை ரத்தாஹீம்மை இத்தனத்தி
வாரீ காரி மானிரே (கபர)

---

35 கொபிநாதேரங்கிசார் கொபி
நாதோக்கி சார் கொபி
திருக்சிஸியா மோறீ பியாரிஷான்
அரஸே டரஸே கரஸேரே அரே
பியாராகு மோரஹை தில்ஜான்ஸே
தெர பியாரிகு மேண்டுகேஸ் பியார் கரஸே (கொபி)

36 ஜாய கோஹாய நைமேலஹாவ் மோரி
ஜாய மேஹாயா கைநேனலஹாவ் மோரி
ஜாய கோ ஹாமோரி ஜாயகே
திகாது ஹைமேராவ்
பிசில ஹாவே
நைநேனல ஹாவ் மோரிஜான்
ஐஸேஸ ஜாவே தில் லேன ஜாவே
ஜாவோஜி லாவோஜி ஜாவோஜி ஹாவ் மோரி (ஜாய)

37 பியாரஸே பதலி கோன ஜாயதோறி
பியாரஸே பதலி கோன ஜாயகா (பியா)
ஏக்கஹை சபலமே கனியாம் பேலி
தனமனுதனுசல ஜாவே
ஏக்கபத்தஹேபியார ஸஹோவே
தனமனு தனுசல ஜாவே சஜனதோரி (பியா)

38 எதி தியாஹே பூலயான போலோ
மேறிஜான் துஸபரீன்ஸ லாஹோ
அதிஸோஹ இஸ்ம டாலிம்
அரநைநேனல கட்டாங்கி ஜாலிம்
அதிஸோஹ இஸ்ந டாலிம்
தனுமன்கரா ஹாய் ஹாய் ஹாய்ஹா ஸோஹ (எதி)

39 கியாதத்துமோஹே சுகுணசுஞவோ பியாரி
சுகுணசுஞவோ பியாறி கியாகத்து மோஹே
ஜானிஸனம்தும் கர்னபேகபியோம்
ஜானிமோகை தூமைபியாரிகியா
தந்துமோஹை (சுகுண)

40 அய்ஸகரஜோகி கரமுஸகர பியாரகர
பியாரிலகு பியாரிலகு ஜான்
சுன்னபிஜானது ஹோயிலபியா
பியால பியால நஞ்

சுன்னபிஜானது ஹோயிலபியாரி
பியாலகு பியாலகு ஜான்
ஜோகிபன கெஜிபன பாவ்
ஹத்தா உனத்தமோ ரத்தமோரிஜான்
ஜகாவ்லமே ஜகாவ்லமே மோரிஜோகி
ஜகாஎலதே ஜகாவ்லமே
சுன்னப்ஜானது ஹோயிலபியாரி
பியாலகு பியாலகு ஜான்
செஞ்சல பியாரி ஹோயி தேரி
தோரமு ஜாவ் ஜாவ் (அய்ஸ்)

---

41 சுனஸாகேப் மேனுதில் ஜல்ஜாயங்கே
சுனஸாகேப் மேனுதில் ஜல்ஜாயங்கே
ரகுங்கப்யாரி மைனகஜார்மே ஹைபியாரிவாலாசுப்
குதர்ஜானஹோ கிலகத்மேஹ மேஹாவலிநாயிககரே
அகர்கரே தோமியா மல்தமல்தஜிதாயிககரே
ரங்கப்யாரிமைனகஜார்மே ஹைபியாரிவாலாசுப் (சுன)

---

42 மொர மனுல குடரா கனரே
நமாலிகவுண்ட ரத்தமோரிஜான்
ஜோர் ஜோர் டன் டன் தூமா முமேஸய்
துமாகுஞ்ச பனபன சனசன தேல்த தேல்த
திருதிரு தனமன சனசன சாப்த சாப்த
சமானேஜாளேஹ்மானே விரபஜானினே ஜானே (மொ)
கெலிய கெலே சலே ஹ்ம்பலதம்பல
புலம்புலாங்க பாலே கலலல டாலே
திருதிருநாம திர்நாம் தீம் தனுமனுசோட்
திடுகிடுநோம் திடுகிடுதகலாம் கிடுகிடு
ஹாஜானே ஜாரினே ஜானே (மொர)

---

43 அபமொஸரா ரகியும் அசஹூர் அபமொஸரர்ரகியும்
ஜொராயி ஸாவரே ஸிபரயி மைனே
காஷிதமகிசண்டே மிதேகலாயி (அப)

ஜானக்தஹா ஆத்தாமோரி ஜீயாநகிமானே
டாகடிாகரு பீவா ஜாத்தடாலகரு கிலடாயி(அப)

---

தூக்கஜம் வாரிமை டலியாங்கியாங் முஜ
தேதேதே பியாரிமை டலியாங்கியாங்
பியாரி லெஷல் மைவாரி ஜானிசொண்ஸல்
அாஹாயமூஸே ஸென் ஸல்நே
கூலமுகர்தே முஹுப்யாரி ஸென்ஸல்
அப்தஜமை காம்கருங்கா ஹாயமுஜே நாதநாஹிஜா
சலசல சோர கருங்கா மொபதில் காமகாஹிஜா
யெஜி அப பரபாபர யெஜிபா யெஜிபா
அம்பர தய்யா (தூக்)

---

45 ஜீயமோர ஜாமானுலய்யா தருண
ஜாரியாஜீயா மோரணு மானுஷய்யா
உமனுயே உமனு ஒடமனு
ஆயுரெங்கதேவா மோரி
தேக்கபினு மகானுயா யாரியா (ஜீயா)
அப்பினபிதா குற்சடணி ஐமரே தபஸே
தேக்கபினு மகானுயா ராஜாயசரியா (ஜீயா)

---

46 ஸைய்யமுரே பணியா மைதேரவாலி
முப்ஸையாகே உன்லீதுக்கானியா
சைச்சாயாபணியாதே மைபேச்சதனியா மோரி
மைச்சுதனியா மைதோவாலி(ஸை)

---

47 ஆவோ ஆவோனைனே மதுபதுலாவே
கனுபாவேகியா தோரேபியாரேபியா
தோரிமானேபினுவேக பண பண ப்பாவோ
ஸஜன பனுவே பனுவே-ஆ

ஆத்தபினைஹறு க்யாகரீறு .
பியாரேபதில்ஹைறப ஜஸீபனுஹோ
க்யகுதா பிசோலி யாபததேவோ(ஆ)

---

40 ஸைய்யாரே ஹமாரேகு சையாரேஹமரே
பியாரல காயுஜான்
பியாரலகாயுஜான் நைனேல காயுஜான்(ஸை)
ஏகதஉஷகே ஸாத்தியாங்குவதஹே
தஸபாஜோபன்கே ஜோரேலகாயுஜான்(ஸை)

---

49 ஆயேஸையா பிலைமதோரி பைய்யா
ஸந்தாவோனரே மெய்கா ப்யா
ப்யாரீகதில்மே ஜாவுமோரி மைகும்
பிரஹாகி மாரிசயல் கட்டாரி
கட்டாரிமோரி ஸையா
க்யவ்மாரிமோரி ஸையா
படுமைதோரி பையா
சலுபலியா பலுபலியா பேகலியா ஒசையர் (ஆ)
ஸையாகே ஸையாப்யாரிஸேனுகிருங்கிரே
பன்கே தோடலூ மனுபாயி
மோஹதாங் ஸலிலஸோஹாய்
லீலேலாய் தாராஸாய் லாகேலா காபோலாய (ஆ)
தக்க தக்க தேக்கோ சுந்தரியான் ஜான்
ஆ ஹா தக் ஓ ஹோ தக்
கோர கோர காலும்ப திருச்சுன காவே ஹோ (தக்)
ஏக்கத்த தேகிவாலி ஜானின ஜாலியாம்
ஹம்ஷ தேக்கோ ஹாவ் திவர்னியாம்
ஹம்ஷ தேக்கோ ஹாவ ஓ (தக்)

---

50 ஆரே ஆவோஜிமெராஜா
ஜஸேதில்மே காயதோரி
மோரபியால் காயுங்கே (ஆரே)

அமாரே தில் லேகானு
தோனேமிலா ஜாயுங்கே ஆவ்
தில்லேபடி ஐமேஜான் (ஆரே)

51 நங்ஷா அமாராரகே
னேக்கெ ஜங்கல்மேயார்
தில்லேலே காயுங்கே ஆவ்ஜான்
மேரே தில்ஹை தில்லேலேகாயுங்கே ஆவ்ஜான்
தூ ஐ பியாரி மேரேலே ஜாரி
காயுங்கேவாரி நைனேலகாரி. நக்

52 தஸ்குமாரேதூ ரெகுவானு கேரலாயுரே (தஸ்கு)
கேரலாயுரே கேரலாயுரே கேரலாயுரே (தஸ்கு)

கச்சகச்ச சாலல்மே கிச்சடிபனுயி
கானவாலேராஜா கானவாலேராஜா
கானவாலேராஜா கிலானேவாலி ராணி (தஸ்கு)

பக்கேபக்கேபானேங்கி பிடியாம்பனுயி
கானவாலேராஜா கானவாலேராஜா
கானவாலேராஜ கிலானேவாலிராணி. (தஸ்கு)

இரண்டாம்பாகம் முற்றுப்பெற்றது.

## இதில்கண்ட வர்ணமெட்டுகள் மதுரை

இந்துஸ்தான்களஞ்சியம் ம-ள-ள-ஸ்ரீ தெய்வேந்திரப்பட்டரவர்கள்
மேங்காட்டுத்தெரு ம-ள-ள ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரஐய்யரவர்கள்
ஸ்ரீபார்ட்—மணி அய்யரவர்கள்.
ரிசர்வ்போலீஸ்—கா. அப்துல்லத்தீவ் சாயபு அவ கள்.
சின்னக்கடைத்தெரு—சன்னாசியாபிள்ளையவர்கள்.
இராமநாதபுரம்—முத்தையாசேர்வையவர்கள்.
மதுரை—சைய துஷைனீஸ்சாயபு அவர்கள்.
பொன்னகரம்—வீ சாஜீநாயுடு அவர்கள்
இவர்களிடம் தெரிந்துகொள்ளலாம்.

விடா நகைப்பை விளைவிக்கும்

## விநோத விகட சிந்தாமணி

நண்பர்கள் இதுவரை விகட புஸ்தகங்கள் அநேகம் பார்த்திருப்பீர்கள் ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாக இராதென்பது திண்ணம்.

இதில் பாரதத்துக்கு கிரதம், ராமாயணத்துக்கு கீமாயணம், வெண்பாவுக்கு கிண்பா, வண்ணத்துக்கு கிண்ணம், என்பதைப் போன்ற ஒவ்வொன்றுக்கும் எகனைக்கு முகனையாக அநேக பாக்களும் யுக்திசாதுர்யவாக்கியங்களுமாக ஆதிமுதல்அந்தம்வரை விகடப்ரசங்கமாகவே அமைக்கப்பெற்றிருக்கிறது. அநேக டிராமாகம்பேனியார்களும் வெளி நாடகக் கம்பேனியார்களும் நம்மிடம்நெடுநாளாக கேட்டுக்கொண்டதின்நிமித்தம்விகடப்ரசங்கத்தில்தேர்ச்சி[illegible]ந்த தகுந்த வித்வான்களைக் கொண்டு பிரயாசையோடு எழுதி[illegible]ட்டிருக்கிறது. வாங்கி வாசிப்பவர்களுக்கும் கேட்பவர்கட்கும் [illegible]தைச்சிறிதும்சோராது விடாநகைப்பைகொடுக்குமென்பது பு[illegible]த்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்கே நன்கு விளங்கும்.

இதன் விலை அணா 0—4—0

### ஷை இரண்டாம் பாகம்.

இதில் பிரசங்கத்திற்குரியபக்கத்திருமுறைகெக்கெக்கென்று சிரிக்க[illegible]செய்யும் விகடக்கற்கண்டெனும் விகடக்கதைகள் அநேகம் அடங்கியுள்ளன. விலை அணா 0—8—0

பலவேசங்களி லொன்றாகிய கோமாளிப்பாட்டு
இதுவும் விகடமாகவே இருக்கும் 0—0—6

ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி முடிசூட்டுத் தர்பார்கீதங்கள் முத்துச்சாமிக்கவிராயரவர்களியற்றியது டான்ஸ் வர்ணமெட்டு
இதன் விலை அணா 0—1—0

| | |
|---|---|
| பார்ஸி நூதன அல்லியரசாணி சரித்திரம் முதற்பாகம் | 0—1—6 |
| ஷை இரண்டாம்பாகம் | 0—1—6 |
| பார[illegible]நூதன கோவிலன் சரித்திரம் முதற்பாகம் | 0—1—6 |
| ஷை இரண்டாம்பாகம் | 0—1—6 |
| பார்ஸி[illegible]தன நல்லதங்காள் சரித்திரம் முத[illegible] | [illegible]—1—6 |
| ஷை இரண்டாம்பாகம் | 0—1—6 |
| லீலாவதி சுலோசனா சரித்திரம் | 0—6—0 |

எமது மேல்விலாசம்,

**இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,**

ரப்பர்ஸ்டாம்புமேக்கர் புக்ஷாப், புதுமண்டபம் மதுரை.